[19th August 1961

SRI M. KALYANASUNDARAM : கிராம விதைப் பண்ணைகள் ஏற்படுத்துவதும் இந்தத் திட்டத்தின் ஒரு அம்சம். தஞ்சாவூர் ஜில்லாவில் எவ்வளவு கிராமங்களில் அம்மாதிரி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அநேகமாக எல்லாக் கிராமங்களிலும் இவை ஏற்படுத்தப்படுகின்றன. அது வில்லேஜ் ஸீட் மல்டிப்ளிகேஷன் பார்ம்கள்.

SRI A. VEDARATHNAM : போர்ட் பௌன்டேஷனில் விதைப் பண்ணைகளுக்கும், அது போன்று வேறு முக்கிய விவசாயக் கருவிகள், இயந்திரங்கள் இவைகளுக்கும் நமது அரசாங்கத்தின் கோரிக்கை பேரில் அவர்கள் கொடுக்கிறார்களா அல்லது அவர்கள் கொடுப்பதைக் கொண்டு நாம் பங்கீடு செய்துகொள்ள வேண்டுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மொத்தம் செலவு என்ன என்று நிர்ணயிக்கப்படுகிறது. திட்டம் நாம் போடுகிறோம். "நாம்" என்பது கூட சரியில்லை. அந்தந்தக் கிராமப் பஞ்சாயத்துக் களே, கிராம மக்களே, பஞ்சாயத்து யூனியன்களே, திட்டங்கள் போடுகிறார்கள். அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

Co-operative Farm

* 1258 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கூட்டுறவு முறையில் கூட்டுப் பண்ணைகள் ஆரம்பிக்கத் திட்டம் இருக்கிறதா ?

(இ) கூட்டுப் பண்ணைகள் ஆரம்பிக்க சர்க்கார் செய்யும் உதவி என்ன ?

(உ) மத்திய சர்க்கார் உதவுவதாக எழுதினார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) : A statement [a] is placed on the table of the House.

Since this statement was printed, the Government of India have now decided the pattern of assistance. The last sentence in the statement says—

'As for other societies, the basis of sharing the expenditure between the Central and State Governments is still under consideration.'

It has now been decided.

SRI A. A. RASHEED : In the statement placed on the table of the House, it is stated that 12 pilot projects would be opened. May I know where these projects will be located?

THE HON. SRI R. VENKATARAMAN : Three, in the districts of Tirunelveli, Madurai and Ramanathapuram.

---

[a] Printed as Appendix II on page 447 infra.

19th August 1961]

Sri M. D. Thiagaraja Pillai : ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகளில் சென்ற வருஷம் ஏற்பட்ட புயலினால், நஷ்டம் ஏற்பட்டு, நெல்லை தேவஸ்தானங்களுக்குக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு, அவர்களது நியாயமான கோரிக்கைகளின் பேரில், தள்ளுபடி கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

The Hon. Sri R. Venkataraman : அது பற்றி என் சகா அமைச்சருக்கு அந்தக் கேள்வியைப் போட்டால், அவர் வேண்டியதைச் செய்வார்.

Sri P. G. Manickam : கோயம்புத்தூர் ஜில்லாவில் ஒன்பது இடங்களில் சர்க்கார் தரிசு நிலங்கள், செட்டில்மெண்ட் பூமிகள் இருக்கின்றன. அங்கே நூற்றுக்கு நூறு ஹரிஜனங்கள் விவசாயம் செய்கிறார்கள். அந்த நிலங்களை கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கொண்டுவர 1960-61-லேயே பரிசீலனையில் இருந்தன. இப்பொழுதாவது அதை அம்மாதிரிக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்படுமா?

The Hon. Sri R. Venkataraman : ஹரிஜனங்களுக்கும், பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் கூட்டுறவுப்பண்ணைகள் ஏற்படுத்த சர்க்காரிடம் 87 ப்ரபோசல்கள் இருக்கின்றன. கோவையில் எந்தப் பண்ணைகள் என்று இப்பொழுது சொல்வதற்கில்லை. தனியாக அந்த ஜில்லா பற்றிக் கேட்டால், தகவல் கொடுக்கிறேன்.

Sri K. Vinayakam : Are there any special or incriminating reasons for not having tried this pilot scheme in the district of Chingleput?

The Hon. Sri R. Venkataraman : Similar insinuating questions may also be put by other hon. Members from other districts.

Sri A. A. Rasheed : What is the basis of sharing the expenditure between the Central and the State Governments?

The Hon. Sri R. Venkataraman : That is again a long list. I would place the statement on the table of the House if a separate question is put.

Sri S. M. Annamalai : இந்த கூட்டுறவுப் பண்ணைகள் சர்க்காருடைய நிலங்களில் ஆரம்பிக்கப்படுகின்றனவா ? அல்லது சிறு நிலச்சுவாந்தார்களை ஒன்றுசேர்த்து இந்தப் பண்ணைகள் ஆரம்பிக்கப்படுமா ?

The Hon. Sri R. Venkataraman : இரண்டு விதத்திலும் ஆரம்பிக்கப்படும். சர்க்கார் நிலங்களில் 'காம்பேக்ட்' டாக இருக்கும் 'ஏரியா' க்களில் லாண்ட் காலனேசேஷன் சொசைடிகள் ஆரம்பிக்க உத்தேசம். தனியார் வைத்திருக்கும் துண்டு நிலங்களையும் ஒன்று சேர்த்து ஜாயிண்ட் பார்மிங் சொசைடிகளாக வைக்க உத்தேசம் உண்டு.